இடி

ஆசிரியர்:
பண்டிட் ஜெயிலானி, M. A., (USA)
தாராபுரம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல்-மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

குயில் மார்க் பீடி
உபயோகியுங்கள்

குயில் மார்க் P.A.R.
ரிஜிஸ்டர் நெ. 1178.
பல்லடம்.
TRADE MARK.
P.A.ரஹீம் சாயபு.

ஏஜண்டு:
K. H. ஷேக்தாவூத்,
புது மார்க்கட், கோவை.

இடி 4 | தமிழ் வாரச் செய்தித்தாள் 16-2-54 செவ்வாய்கிழமை | ஒலி 1

ஜி. டி. நாயுடு ஏன் உடைத்தார்!

தினமணியின் பித்துக்குலித்தனம்!

சென்னையில் எங்கு பார்த்தாலும் அறிஞர் ஜி. டி. நாயுடுவின் பேச்சாகவே இருக்கிறது. ஏன்? கடந்த மாதங்களில பார்க்பேர் கண்காட்சியில் விலை மதிக்க முடியாத அபூர்வ யந்திர சாதனங்கள் முழுதும் கண் காட்சிக்கு வைக்கப்பட்டு அவைகள் எவ்வாறு வேலை செய்கின்றன என்று எடுத்துக் கூறு வதற்கு சுமார் நூறு ஆட்களை வைத்து கைத்தொழில் அறிவு வளர பேசுவதோடல்லாமல் செய்தும காட்டினர்!

குறைந்த விலையில் ரேடியோ செய்யலாம் என்று வெறுமனே வாய் வேதாந்தம் பேசுவதல்ல. சென்னையிலே தினமும் சில ரேடியோக்கள் செய்து செய்து கண் காட்சியில் வைத்துக் கொண்டே இருந்தார்கள். கடிகாரங்கள் கண் காட்சியில் உள்ள யந்திரங்கள் கடிகார பகுதிகள் முழுதும் செய்யப்பட்டு அதே கண் காட்சியில் பூட்டப்பட்டு மாட்டிக்கொண்டே இருக்கிறார்கள்.

பேனாக்கள் முழுதும் கண் காட்சியிலே தயாரிக்கப்பட்டது. நிப் முதல் எல்லாம் அங்கேயே அங்குள்ள யந்திரங்களின் உதவியால் தயாரிக்கப்பட்டு கண் காட்சியில வைக்கப்பட்டன.



இவைகளை எல்லாம் தினமும் மக்கள் பார்த்தார்கள். நமது நாட்டு யந்திர வளர்ச்சியைக் கண்டு அதிசயித்தார்கள். இவைகளை தயாரிக்கின்ற அறிஞர் நாயுடுவுக்கு அரசியல் உலகம் ஏன் ஆதரவு தராமல் இருக்கிறது? என்று சிந்தித்துக்கொண்டே இருந்தார்கள். ஆட்சியாளரின் போக்குக்கு மக்கள் இதயத்திலே ஒரு மாதிரியான வெறுப்பு உண்டாகி இருந்தன. ஜி. டி. நாயுடுவுக்கு ஏன் லைசென்சு தரக்கூடாது? அவருக்கு ஆதரவு தந்தால் வேலையில்லா திண்டாட்டம் நீங்கி விடாதா? அந்நிய நாட்டிற்கு நமது நாட்டிலிருந்து வீணாக எதற்கு யந்திர சாதனங்களை வாங்க பணம அனுப்பவேண்டும் என்று சிந்தித்தார்கள் அதை மற்றவர்களுக்குக் கூறினார்கள். தமிழர்கள் வளர்ந்தால் தங்கள் வாழ்வுக்கு வழியிருக்காது என்று கருதுகிற ஒரு கும்பல அறிஞர் நாயுடு வருமான வரி கொடுப்பதில்லை. ஆகலால் அரசாங்கம் இவர் செய்கின்ற வேலைக்கு ஆதரவு தருவதில்லை என்று துற்பிரசாரம் செய்து வந்தார்கள். அரசாங்கம் விதிக்கிற வருமான வரிகள் அளவை எதிர்த்து ஜி. டி. நாயுடு மாத்திரம் வாதாடவில்லை. இன்னும் எத்தனையோ வியாபாரிகள் வாதாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். நாயுடுவின் முறையீடு சரியானதாக இருந்தால் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். இல்லை என்றால் தான் விதித்த வரியே சரியென்று வாங்கிக் கொள்கிறது. இது நாயுடுவுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள தனிப்பட்ட விஷயம். இதனால் நாயுடுவை எதிர்த்து துற்பிரசாரம் செய்யவேண்டியதில்லை. வரி

4-பக்கம் விலை 0—0—6

கொடுக்காமல் வாதாடுகிறார் என்பதற்கு அவர் செய்கின்ற அரிய காரியங்களை எதிர்த்து எழுதுவது பேசுவது மிக மட்ட ரகமான போக்காகும். அந்தத் தோழர்களுக்கு நாம் சவால் விடுக்கிறோம். இந்தியாவிலே கைத்தொழில் வளர்ச்சிக்காக அறிஞர் நாயுடு வைப் போல் வேறு யார் மகத்தானத் திட்டத்தை கையிலே வைத்திருக்கிறார்? கடந்த இருபது ஆண்டுகளாக இடைவிடாது இரவு பகலாக முயன்று பல யந்திரங்களைச் செய்து அவற்றில் எந்த விதமான பிரதி பிரயோஜனமும் கருதாமல் ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு இலவசமாக அதை விளக்கிக்காட்டிக் கொண்டிருக்கிறார்? இந்த கண் காட்சியில் முடக்கப் பட்டிருக்கும் யந்திரங்கள் இதுவரை நாயுடுவுக்கு ஒரு பைசா வருமானத்தை உண்டு பண்ணியிருக்குமா? இந்த தாராள உள்ளம் இந்தியாவில் உள்ள வேறு எவருக்கு இருந்தது இருக்கிறது என்று நாம் கேட்கிறோம். இதற்கு தினமணி போன்ற குல்லூக பட்டர்கள் பதில் கூறுவார்களா? ஆட்சியாளர்களின் செல்லக் குழந்தைகளாகிய பிர்லா இப்மாதிரி செய்திருக்கிறாரா? அல்லது வால்சந்ஹிராசந் இதைச் செய்து காட்டியிருக்கிறாரா? டால்மியா தான் செய்திருக்கிறாரா? பிர்லா மாளிகையின மர்மங்கள் என்ற புஸ்தகத்தை தினமணி படித்துப பார்க்கட்டும். ஆட்சியாளரின போக்கு தெரிந்து கொளளமுடியும். யாருக்குச் சலுகை வழங்கப்படுகிறது, ஏன் நாயுடுவை நிராகரிக்கிறார்கள் என்பதைத்தெரிந்து கொள்ளமுடியும். வட நாட்டாகள் தெனனாட்டைச் சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள் இதற்கு ஆட்சியாளரின் ஆதரவு இருக்கிறது என்பது தான் நாயுடுவின் வாதம் இதற்கு எத்தனை ஆயிரம் ஆயிரம் எடுத்துககாட்டுகள் வேண்டுமானாலும் இருக்கிறது. ஏன் தினமணி உரிமையாளர் ஸ்ரீ ராமநாத் கோயஙகோ வட நாட்டு முதலாளி தமிழ் நாட்டிலே இவருக்கு எனன வேலை தினமணி கதிர் போன்ற பத்திரிகையில் கொள்ளை லாபம சம்பாதிப்பது எல்லோரும் தெரிந்தது தானே. திருக்குறள் முனிசாமியோடு போட்டி போட்டு மண்ணைக் கவ்வியது எதைக் காட்டுகிறது. வட நாட்டானுக்குத் தென்னாட்டில் இடமில்லை என்பதைத்தான் நிருபிக்கிறது. கோயங்கோ தேர்தலில் நிற்க விரும்பினால் வடநாட்டில் நிற்கட்டுமே! தமிழ் நாட்டில் ஏன் நின்றார். இழிச்சவாயன் தமிழன் என்ற எண்ணத்தை தவிறவேறு ஏதுவாக இருக்க முடியும் தினமணி நிர்வாகஸ்தர்களுக்கு கொள்கை என்ன இருக்கிறது. ஆட்சியாளரின் பாதம தூக்கி தேசியத்தாள் என்று கூறிக்கொண்டு அரசாங்கம் தருகின்ற விளம்பர வருமானத்தில் தென்னாட்டில் குடியிருந்து தமிழன் செய்கின்ற முயற்சியை தட்டி அடக்க முயற்சிக்கிறது. தெலுங்கு பாஷையில் ஆந்திர பிரபா என்ற பத்திரிகை நடத்துகிறது. அந்த பத்திரிகையில் சென்னை ஆந்திரர்களுக்குச் சேரவேண்டும் என்று தலையஙகம் எழுதுவது தினமணித் தமிழ் பத்திரிகை சென்னை தமிழ் நாட்டிற்குச் சேரவேண்டும் என்று தலையங்கம் எழுதுவது இது தான் கோயங்கோவின் கொள்கை. ஆந்திரப் பிரபாவின் உரிமையாளர்களும் தினமணியின் உரிமையாளர்களும் ஒருவரே. இந்த லட்சணத்தில் தில் அறிஞர் நாயுடுவின் செய்கையைப் பற்றி பித்துக்குலித் தனம் என்ற தலையங்கம் எழுதுகிறது தமிழர்கள் பித்துக்குலிகளாக உங்களுக்குத் தெரிகிறது. ஏனென்றால் தம்ழர்கள் உங்கள் பத்திரிகையை வாங்குகிறார்கள். தமிழ் நாட்டில் உங்களை வாழ விட்டிருக்கிறாாகள். ஆதலால் பித்துக்குலிகள் தான்! தமிழர்கள் இனிமேல நலலவர்களாகி விடுவாாகள் அந்த நாள் வெகு தூரம் இல்லை. பக்கத்தில் தான் இருககிறது!

ஏன் உடைக்கப்பட்டது?

பொருமைக்கும் எல்லையுண்டு. பல வருடங்களாக அரிய முயற்சிகள் எடுத்துக்கொண்டு அந்நிய நாட்டை எதிர்பார்க்காமல் இந்தியாவிலே எல்லா யந்திரங்களையும் உற்பத்தி செய்யலாம் என்று பல திட்டங்கள் தீட்டி அரசாங்கத்தின் ஆதரவு கோறினார் அவைகள் அனைத்தும் ஏதாவது நொண்டிச்சாமாதானம் கூறி அரசாங்கம் மறுத்துவிட்டது.

ரேஷர் பிளேடுகள் என்ன? ரேடியோக்கள் என்ன? டீசன் என்ஜின்கள் என்ன? கடிகாரங்கள் என்ன? மோட்டார் உற்பத்திகள் என்ன? ரேடியோக்கள் என்ன? இவைகள் அனைத்தும் இந்தியாவில் தயாரித்த நமது நாட்டுத் தொழிலாளர்கள் சுக வாழ்வு வாழவும், நமது நாட்டுப் பணம் நமது நாட்டிலே இருக்கும் படியாகவும் செய்த முயற்சிகள் அனைத்தும் சிதாடிக்கப்பட்டது. இதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சி உடல் உழைப்பும் சிதரடிக்கப்பட்டது. நாட்டுக்கும் தனக்கும் பலனில்லாத ஒன்றை ஏன் வைத்திருக்கவேண்டும். கருகிய மொட்டு அழுகிய பழம், சிதைந்த வீடு அழிக்கப் படவேண்டியது தானே. ரேடியோக்கள் உடைக்கபபட்டதாலே யாருக்காவது கொடுத்தால் என்ன? என்று சிலர் நினைக்கலாம். யாருக்காவது கொடுக்கவும் அரசாங்கம் அனுமதிக்காது. அரசங்க அகராதிப்படி விலைக்கு விற்றதாக ஏற்படடு விடும்.

தினமணியின் உபதலையங்கத்தில் ஜி. டி. நாயுடு செய்தது பித்துக்குலித்தனம் என்று எழுதியிருக்கிறது. ஒரு பொருப்புள்ள பத்திரிகை நாட்டில் நடக்கும் ஒரு சம்பவம் பற்றி ஒரு தலையங்கம் எழுதுவதற்கு முன்னர் அது சம்பந்தமான பல ஆராய்ச்சிகள் செய்து எழுதவேண்டும். அது தான் ஒரு பததிரிகாசியரின் தர்மம். உதாரணமாக காஷ்மீர் பிரச்சனையைப் பற்றி ஒரு தலையஙகம் எழுதவேண்டுமானால் காஷ்மீர் சம்பந்தமான புத்தகஙகள் இந்தியா, பாக்கிஸ்தான் தலைவர்களின் அப்பிராயம், இரு நாட்டுப் பத்திரிகைகளின பல தலையஙகளைப் படித்து எழுதினால் தான் ஒரு படிப்பினையாக இருக்கும் அதை விடுத்து எதோ ஒன்றை உளரிக் கொட்டினால் அறிவுள்ள வாசகர்கள் ஆசிரியரை முட்டாள் என்று தான் கூறுவாாகள். தினமணி ஆசிரியருக்கு ஜி. டி. நாயுடு வைப்பற்றி என்ன தெரியும். அவர் அடிககடி தனது அபிப்பிராயஙகளை பத்திரிகை வாயிலாகவும், புத்தகங்கள் மூலமாகவும் சென்ற 15 ஆண்டுகளாக வெளியிட்டிருக்கிறார். அவைகளை வாஙகி படித்து விஷயம தெரிந்திருக்கலாம் முற்போக்குப் பத்திரிகைகளாக பிரிட்ஜ், ஆட்டம, முதலிய ஆங்கிலப்பத்திரிகையிலும் பிரி இண்டியா போன்ற பொதுப்பத்திரிகையிலும், மற்றும சிவாஜி, இடி போன்ற பது பததிரிகையிலும் அடிக்கடி அறிஞர் நாயுடுவை பற்றி எழுத்துக்களை சேகரித்து படித்து தமது கருத்துக்களை ர்வெளியிடலாம் இல்லை என்றால் அறிஞநாயுடுவுக்கே எழுதி நீங்கள் என்ன காரணத்திற்காக உஙகள் உற்பத்திப் பொருள்களை உடைக்கின்றீர்கள்? அரசாங்கம் உங்களுக்கு என்ன ஆதரவு செய்ய மறுத்தது? என்று கேட்டிருக்கலாம் இவைகள் அனைததும் சேக

ஸ்ரீ குமாரசாமி ராஜாவுக்கு

கவர்னர் பதவியின் மர்மம்!

(இடி நிருபர் வெடி)

தமிழ் நாட்டில் காங்கிரசில் இரண்டு கட்சிச் சண்டைகள் இருப்பது எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க ரகஸ்யம். ஒன்று காமராஜ் கோஷ்டி மற்றொன்று ராஜாஜி கோஷ்டி. காமராஜ் கோஷ்டியினர். செல்வாக்குப் படைத்தவர். ராஜாஜி கோஷ்டியினர் குறைவு. காமராஜ் பார்த்து நினைத்தால் எந்த நிமிஷத்திலும் ராஜாஜியைக் கவிழ்த்து விடலாமாம்! மேலிடத்தார் ராஜாஜியை ஆதரிக்கும்படி சில ரகஸ்ய வேலைகள் ராஜாஜி கோஷ்டியினர் செய்திருக்கிறார்களாம். என்ன தான் தந்திரங்கள் செய்தாலும் ஜனநாயக அடிப்படையில் காமராஜ் கோஷ்டியினர் முயன்றால் ஒரு விநாடியில் ராஜாஜியை வெளியேற்றிவிடலாமாம். ஆனால் காமராஜ் பலே கெட்டிக்காரர் தனது செல்வாக்கை இடீரென்று உபயோகப்படுத்தக்கூடாது தனது செல்வாக்கைக் கண்டு தானாகவே ராஜாஜி வெளியேறி விடுவார் என்ற நம்பிக்கையில் இருக்கிறாராம்.

ஆனால் காமராஜ் கோஷ்டியினர் செல்வாக்கைக் குறைக்க ராஜாஜி கோஷ்டியினர் அனேக வேலை செய்திருக்கிறார்களாம். காமராஜுக்கு மிகவேண்டியவர்களை எல்லாம் நல்ல பதவியில் அமர்த்தி விட்டாராம். காமராஜிக்கு ஆள்பலமும் வேலை பலமும் இல்லாமல் போய்விடுமல்லவா? அதற்காகத்தான் ஸ்ரீ பக்தவத்சலத்திற்கு மந்திரி பதவி, ஸ்ரீ ராஜாராம் நாயுடுவுக்கு மந்திரி பதவி. தாழ்த்தப்பட்ட மக்கள் காமராஜரை ஆதரிக்கிறார்கள். இந்த ஆதரவைக் குறைக்க ஸ்ரீமதி ஜோதி அம்மாளுக்கு ஒரு மந்திரி பதவி.

கடைசியில் குமாரசாமி ராஜா! காமராஜர் போடும் கோட்டிற்குமேல் தாண்டாதவர் அப்படிப்பட்ட குமாரசாமி ராஜாவுக்கு ஒரு கவர்னர் பதவி கொடுத்துவிட்டால் அவரும் தமிழ் நாட்டில் இருக்கமாட்டார். அவர் சம்பந்தமான ஆதரவுகளும் காமராஜருக்கு இருக்காது. ஆதலால்தான் இந்த திடீர் பதவி குமாரசாமி ராஜாவுக்கு கிடைத்தது என்று நமது இடியின் ரகஸ்ய நிருபர் வெடியார் நினைக்கிறார்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சித்து, பிறகு தமது அபிப்பிராயத்தை எழுதியிருக்கலாம். நாம் முழுமனதுடன் அதை வரவேற்போம். அதை விடுத்து விஷயம் தெரிய முயற்சிக்காமல், விஷயம் தெரிந்தவர்போல் பித்துக்குலித்தனமாக எழுதுவதை இனியும் தென்னாட்டவர் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது.

சென்னையில் முஸ்லிம் முரசு என்ற மாத இதழ் இந்த உடைப்பு விழாவைப் பற்றி அழகான தலையங்கம் பிப்ரவரி இதழில் எழுதியிருக்கிறது. இந்த உடைப்புக்கு ஆட்சியாளர் பதில் சொல்லவேண்டும் என்று கோரியிருக்கிறது. இது தான் நியாயமான தலையங்கம். 'தினத்தந்தி' உடைத்ததற்கு காரணம் எழுதியிருக்கிறது நல்லதொரு கார்டூனும் போட்டிருக்கிறது

நாயுடு அவர்கள் தான் கண்டுபிடித்த தமது நாட்டில் கைத்தொழிலை வளர்த்த இதுவரை தனது தொழிற்சாலையில் உற்பத்தி செய்த பொருள்களைக் காட்டாத, அரசியல் தலைவர்களே இந்த நாட்டில் இல்லை என்று சொல்லலாம். மத்திய சர்க்கார் மந்திரி V. V. கிரி உட்பட, ஹுமாயூன் கபீர், போன்ற உத்தியோகஸ்தருக்குதனது யந்திரங்களை காட்டி அவர்களது முன்னிலையில் ஒவ்வொரு பொருளாகச்செய்து காட்டியிருக்கிறார். உலகம் புகழ் விஞ்ஞானி சர். C. V. ராமன் விஸ்வேஸ்வரய்யா வரையில் எல்லா அறிஞர்களும் நாயுடுவைப்பற்றி வெகுவாகப் பாராட்டி இருக்கிறார்கள். நாயுடுவுக்கு நல்ல ஆதரவு இல்லை என்று வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். நாயுடுவின் பங்களாவிற்கு வந்து போகாத அறிவாளிகளே இந்தியாவில் இல்லை என்று சொல்லலாம். அவ்வாறிருக்க சண்டைக்காய் தினமணி முற்றும் தெரிந்ததுபோல் மூடத்தனமாக எழுதிய தலையங்கம் நம்மை வாதனை செய்கிறது இன்றைக்கு ஒரு பெரிய தொழிற்சாலை நடத்த வேண்டுமானால் மத்திய சர்க்காரின் ஆதரவும் மாகாண சர்க்காரின் ஆதரவும் இருந்தால்தான் நடத்தமுடியும். தனிப்பட்ட ஒருவர் ஒன்றும் செய்துவிடமுடியாது. சில குறிப்பிட்ட வடநாட்டு முதலாளிகள் இந்த ஆதரவை பல வகையில் தேடிக்கொள்கிறார்கள். மேல்நாட்டிலிருந்து யந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு அவர்களுக்குதான் அதிகமாக லைசன்சு இருக்கிறது. இந்த நாட்டில் புதிய யந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்குதான் அதிக லைசன்சு வழங்கப்பட்டிருக்கிறது. வால்சந்து ஹிராசந், பிர்லா, டாட்டா போன்றவர்கள் ஒரு தொழிற்சாலையை நிமிஷநேரத்தில் ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால் அறிஞர் நாயுடு போன்றவர்கள் ஆரம்பிக்க முடியவில்லை ஏன்? வடநாடு தென்னாட்டை ஆள முயற்சிக்கிறது. மத்திய சர்க்கார் வடநாட்டு முதலாளிகளுக்குத் தாளம் போடுகிறது. வடநாட்டுக்கு தென்னாடு ஒரு சந்தையாக இருக்கவேண்டும். இதுதான் இன்றைய ஆட்சியில் நடப்பது. இதை எத்தனை ஆண்டுகள் பார்த்துக்கொண்டிருப்பது? தென்னாட்டு ஒரு தம்படியும் கூட வடநாட்டுக்கு போகப்படாது என்பதுதான் நாயுடுவின் கொள்கை. அதை ஆட்சியாளர்க்கு எடுத்துக்காட்டுவதற்குத்தான் அன்று சென்னையில் நூறு ரேடியோவும் நூறு கடிகாரங்களும், நூறு பவுண்டன் பேனாவும் உடைக்கப்பட்டது.

பாலில் தண்ணீர்!

பாலில் தண்ணீரும், தண்ணீரில் பாலும் சர்வ சகஜமாய் போய்விட்டது: கோவையில்! இதை தயவு தாட்சண்யமின்றி முனிசிபாலிடி சுகாதார இலாகா கடுபிடியாக இருந்தால் தான் நிவர்த்திக்க முடியும். வெண்ணெய் எடுக்கப்பட்ட பாலும் விற்பனைக்கு வருகிறதாம். இந்தப் பாலில் எந்த வித சக்தியும் இல்லை. சாதாரண வீட்டுப் பெண்களுக்கு இதைப்பற்றி என்ன தெரியும்? முனிசிபல் சுகாதார இலாகாவினர் இதைக்கவனித்து ஆவன செய்தால் நகரத்தில் வாழும் மக்களுக்கு பெரிய நன்மை ஏற்படும்.

சில தொழிலாளர்களின் முன்னேற்றம்!

பொழுதெல்லாம் சம்பாதித்த கூலிப் பணத்தை இரவு நேரத்தில் சிறிய சந்துகளில் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்து கொண்டு காம்போட்டு விளையாடுதல், சீட்டு விளையாடுதல், குண்டு விளையாடுதல் ஆகிய வற்றில் செலவு செய்து வீடு திரும்புகிறார்கள். இவர்களின் முன்னேற்றம் இந்த அளவில் இருக்கிறது. இவர்கள் சிறிய குழந்தைகளா உபதேசம் செய்வதற்கு! எப்படித்தான் திருந்துவார்களோ?

ஏமாராதீர்கள்!

பட்டணத்தில் ஏமாற்றுவது சர்வ சகஜமாய்ப் போய்விட்டது. சில ரவுடிகள் ஆள் நடமாட்டம் குறைவாக உள்ள இடத்தில் நாடாத்திருவிளையாடல்கள் செய்கிறார்கள். அதாவது ஒரு நாடாவை ஒரு குச்சியில் சுற்றி எடுப்பது. அது சரியாக இருந்தால் கட்டும் பந்தயத்தொகைக்கு சமமாகக்கூட்டிக் கொடுத்தல் என்ற அடிப்படையில் இதை சில ரவுடிகள் செய்து பாதயில் போகும் ஏழை கிராமவாசிகளை ஏமாற்றுகிறார்கள். டவுனுக்கு ஆஸ்பத்திரிக்கோ, ரயில்வேஸ்டேஷனுக்கோ, கோர்ட் ஜோலிக்கோ வரும் கிராமவாசிகளை இந்த விளையாட்டில் பணம் வைக்கும்படி செய்து ஏமாற்றி அவர்களை மோசம் செய்து விடுகிறார்கள். இந்த ரவுடிகளுக்கு எப்பொழுதும் உள் ஆட்கள் உண்டு இவர்களும் பார்த்தால் கிராமவாசிகள் போல் இருப்பார்கள். இவர்கள் பக்கத்தில் போகும் கிராமவாசிகளைக் கூப்பிட்டு இம்மாதிரி செய்தால் நமக்கு இரட்டிப்பாகவும் பணம் கிடைக்கும் என்று கூறுவார்கள். இதை நம்பி ஏமாந்து போய்விடுவோர்கள் இந்தத் திருவிளையாடல் வீராசாமி ஸ்கூல் ரோடில் தினமும் நடைபெறுகிறதாம். இதைப் போலீசார் கவனிக்கவேண்டுகிறோம்!

*   *   *

டீக்கிளப்புகளில் இரவு நேரத்தில் சிலர் வந்து உபயோகப்படுத்திய டீ இலைகளை விலைக்கு வாங்கி போகிறார்களாம். இந்த டீ இலைகளை காயப் போட்டு சில சிறு வியாபாரிகள் தங்கள் டீ இலையோடு கலந்து விற்பனை செய்கிறார்களாம். இது பெரிய ஏமாற்று வித்தை! டீக்களப்புக்காரர்கள் அம்மாதிரி உபயோகப்படுத்திய டீ இலைகளை விலைக்கோ, அல்லது சும்மாவோ யாருக்கும் கொடுக்கவேண்டாம். இதை நாசப்படுத்தி விடுங்கள் என்று பணிவாக வேண்டிக்கொள்கிறோம் இவர்கள் இதை வேறு யாருக்கும் கொடுத்தால் அந்த ஏமாற்றுக்காரர்கள் விபரம் தெரியாதவர்களை ஏமாற்றுவதோடு அல்லாமல் சில சமயங்களில் நீங்களே அதை வாங்கும்படியும ஏற்பட்டுவிடும். இம்மாதிரி உபயோகப்படுத்தப்பட்ட டீ இலையை வாங்குவர்களை உடனே முனிசிபல் சுகாதார இலாகாவுக்கு கையோடு கொண்டுபோய் நல்ல பாடம் கற்பிக்கவேண்டுகிறோம்.

மருந்து வியாபாரமா? மது வியாபாரமா?

மருந்துக் கடையில் போதை தரும் எஸ்ஸென்சுகளை மதுவைப் போல் விற்று வருகிறார்களாம். இவர்கள் யார்! விலாசமென்ன? இதை விளம்பரபடுத்தி ஆட்சியாளருக்கும் போலிசுக்கும் தகவல் கொடுக்க விரும்புகிறோம். நேயர்கள் எழுதிய னுப்ப வேண்டுகிறோம்.



அன்பர்களே! வணக்கம். இடிக்கு இப்பொழுது மூன்று ஆண்டு முடிந்து நான்காவது வருடம் பிறந்திருக்கிறது. உங்கள் பேராதரவால் பல இன்னல்களை கடந்து யாருக்கும் அஞ்சாது மக்கள் குரலைப் பிரதிபலித்து வந்திருக்கிறோம். சில பெரிய மனிதர்களின் உருட்டல் மிரட்டல் இடிக்கு சர்வ சகஜமாய் போய்விட்டது. வக்கீல் நோட்டீஸ்கள் என்ன? ஆள் மூலமாகச் சொல்லி அனுப்புதல் மொட்டைக் கடிதங்கள் எழுதுதல் இவைகளுக்கெல்லாம் இடி அஞ்சுவதாக இல்லை. சாதாரண ஏழை மக்களின் இதயகீதமே "இடி" இடிக்கு எந்த அரசியற் கட்சியைச் சார்ந்த பத்திரிகையும் அல்ல. நேர்மையை அணைக்கும். அநீதியை இடிக்கும் இது தான் இடியின் கொள்கை.

தாராபுரத்திலிருந்து 'இடி' வெளி வந்தது. இனி கோவையிலிருந்து வெளி வரும். நேயர்கள் இனிமேல் இடிக்கு எழுதும் கடிதங்கள் கோவை விலாசத்திற்கு எழுதும்படி வேண்டுகிறோம். வழக்கம்போல் இடிக்கு வாசகர்கள் ஆதரவு தர வேண்டுகிறோம்.

தங்கள் ஊழியன்
பண்டிட் ஜெய்லானி,
ஆசிரியர் "இடி"

'இடி'க்கு செய்தி அனுப்புவோர் கவனிக்க!

உங்கள் குறைகளை தெரிவிக்க! நியாயமான செய்திகளைப் பிரசுக்கிறோம்.

உங்கள் வார்டுகளில் உள்ள குறைகளை எழுதுங்கள் பிரசுரிக்கிறோம். சமூதாயத்திற்கு நன்மையான செய்தியை யாருக்கும் அஞ்சாமல் எடுத்து இடித்துரைப்பதே இடியின் கொள்கை! 'பிரசுரிப்பதற்கு' என்ற தலைப்போடு ஒரு அணா தபால் பில்லை ஒட்டி புக் போஸ்டில் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள்.

ஆசிரியர் "இடி"
தாமஸ் வீதி, கோயமுத்தூர்

*   *   *

ஏழைகளின் பரிதாபம்!
தங்குவதற்கு இடமில்லை!

கோவையில் எங்கு பார்த்தாலும் தாழ்த்தப்பட்ட ஏழைமக்கள் குழந்தைகளோடு தெருத்தெருவாக அலைகிறார்கள். முனிசிபாலிடி ரோடுகளின் ஓரங்களிலும், வீட்டு வாசற்படிகளிலும் இரவில் தூங்குகிறார்கள் தண்ணீர் குழாயிற்கு பெரிய குழாய் பூமிக்கடியில் போடுவதற்கு வைத்திருக்கிறார்களல்லவா! அதற்குள்ளும் படுத்து நித்திரை செய்கிறார்கள். தங்களுடைய பிச்சைப் பாத்திரத்தை அதற்குள் வைத்து விடுகிறார்கள். இதை மற்ற பிச்சைக்காரர்கள் எடுத்து சாப்பிட்டு விட்டால் அவர்களுக்குள் கலவரம்.

தாமஸ் வீதியில் ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணின் இரண்டு வயது உடைய பெண்குழந்தை அம்மை நோய்கண்டு அந்த ரோட்டில் உள்ள அந்த பெரியகுழாயிற்குள் அந்தக் குழந்தையைப்போட்டுவிட்டு அவள் வீடு வீடாகப் பிச்சை வாங்கப் போகிறாள். அம்மை ஒரு தொத்து நோய் இந்தக்கொடிய உஷ்ண காலத்தில் குழாயின் வெப்பத்தை பாவம் அந்தக் குழந்தை எப்படித் தாங்குமோ? அக்கம் பக்கத்திற்கு அந்த நோய் பரவவும் ஏதுவாக இருக்கிறது முனிசிபாலிடியார் இந்தப் பிச்சைக்காரர்கள் படும் அவதியை நீக்க ஏதாவது விமோசனம் செய்வார்களா! அல்லது அவர்கள் படுகின்ற கஷ்டத்தோடு அம்மை நோய்க்கு நம்மையும் பலியாக்குவார்களா?

○

'இடி'யில் தொடர்ந்து அறிஞர் ஜி. டி. நாயுடுவைப்பற்றி குறைந்தது ஒரு பக்கம் செய்திகள் வெளிவரும். நாயுடுவைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் தொடர்ந்து இடியைப் படிக்கவேண்டுகிறோம்.

○

சகல விதமான ஜவுளிகளுக்கும்
சிறந்த இடம்
பிரகாசம்
ரெடிமேட் ஸ்டோர்ஸ்
இன்றே விஜயம் செய்யுங்கள்.

பீடிகளில் சிறந்தது
S. P. S. மஜீத்
மார்க் பீடிகள்

ஆசிரியர், வெளியிடுபவர்:— பண்டிட் ஜெயிலானி விஷாரத், கோவை. அச்சிட்டது:— ராயல் பிரஸ் கோயமுத்தூர.